**வெலிகேபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக வெலிகேபொல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

i. காசுப்பாய்ச்சல் கூற்று
ii. பாதீடப்பட்ட தொகையையும் உள்ளபடியான தொகையையும் ஒப்பீடு செய்யும் கூற்று.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 53,206,461 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட வடக்கு ஹுணுவல மற்றும் பெலென்தகந்த நீர் உத்தேசத் திட்டத்திற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மானியம் மற்றும் கடனாக கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடு ரூபா 49,456,206 தொகை சபை நிதியத்திலிருந்து புறம்பான கணக்கின் மூலம் செலவிடப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வடக்கு ஹுணுவல மற்றும் பெலென்தகந்த நீர் உத்தேசத் திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் பணம் ரூபா 18,156,065 தொகை சபையின் மூலதனமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட கடன் பணத்தின் முதலாவது கட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 675,194 வட்டித்தொகையொன்று செலுத்த வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக வருமானச் செலவினக் கணக்கில் செலவினமாகச் சீராக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முதலாவது கட்டத்தின் கடன் தொகையாக முன்னைய ஆண்டிற்குரியதாகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 1,583,341 ஆக இருந்த போதிலும் இது தொடர்பாக திரண்ட நிதியக் கணக்கில் சீராக்கம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மேற்கூறப்பட்ட கடனில் 2 ஆவது கட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 841,243 தொகையான வட்டி செலுத்த வேண்டி இருந்த போதிலும் 2013 ஏப்ரல் 22 ஆந் திகதி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட வட்டி ரூபா 282,134 ஆனமையால் செலுத்த வேண்டிய வட்டி 559,109 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் வரையிலும் சகல நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,042,123 தொகை சபை நிதியத்திற்குக் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 105,416 தொகை இனங்காணப்பட்டிருக்கும் போது 2013 ஆம் ஆண்டில் பற்றுச் சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 3,500,000 தொகை மீளாய்வாண்டின் கிடைக்க வேண்டிய வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி மிகை ஒதுக்கமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் மார்ச் மாதம் வரையில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 966,000 சபை நிதியத்திற்கு கிடைத்திருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் பற்றுச் சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 5,000,000 தொகை மிளாய்வாண்டின் கிடைக்க வேண்டிய வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் மீதி மிகை ஒதுக்கமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 107,428 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கில் ஊடாக நிலையான சொத்துக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் கணக்கிற்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானம் பங்களிப்புக் கணக்கிற்கும் இடையே காணப்பட்ட ரூபா 89,023 தொகையான வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

9 வருடம் அளவிலான காலமாக கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,504,812 தொகையான கடன் மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 3,255,947 தொகை, ரூபா 1,510,043 தொகை என்பன கணக்காய்வுத் திகதியான 2014 மே 07 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 132(ஓ) பிரிவு | அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 செலவில் சனசமூக மண்டபத்திற்கு அருகில் புத்தர் சிலை ஒன்றை அமைப்பதற்காக தேவையான கட்டிடத்தில் ஒரு பகுதியை நிர்மாணித்தல் |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2)ஈ | 1988 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை 168 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2,371,861 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் இலக்கம் 570 மற்றும் 571 | 1995 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 1,022,121 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,784,070 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 686,904 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் மிகை ரூபா 3,097,166 இனால் அதாவது 450 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஏனைய வரி வருமானங்கள் (ஆதனவரி, சேவைகளுக்கான கட்டணம், தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணங்களும்) அதிகரித்திருந்தமை அதற்காகத் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,271 | 2,682 | 1,393 |
| வாடகை | 938 | 758 | 113 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 530 | 765 | 30 |
| ஏனைய வருமானம் | 11,955 | 10,463 | 8,500 |

### 2.3.2 நீர்க்கட்டணம்

பிரதேச சபையின் பிரதான வருமான வழியான நீர் சேவைகளுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 2,464,559 வருமானம் கிடைத்திருந்தது. அதற்காக சபையினால் ரூபா 3,953,146 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நீர் வழங்கல் வருமானத்தை விட ரூபா 1,488,587 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் 2013 மார்ச் மாதத்தின் பினனர் இனங்காண்பதற்கோ அல்லது வருமானத்தை சபைக்கு அறவிடுவதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தின் மூலம் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் 2012 செப்தெம்பர் மாதத்தின் பின்னரும் எம்பிலிபிட்டி நீதவான் நீதிமன்றத்தின் மூலம் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் 2012 யூன் மாதத்தின் பின்னரும் இனங்காண்பதற்கோ அல்லது சபைக்கு அறவிடுவதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சட்டரீதியாக கட்டணம் அறவிடக்கூடிய அறிவித்தல் பதாதைகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி உரிய கட்டணம் அறவிடப்பட்டிக்கவில்லை.

### 2.3.5 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல தொலைபேசிக் கோபுரங்களுக்காகவும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையில் விதிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் எக்கட்டண அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 வாராந்த சந்தை வாடகை**

வெலிகேபொல வாராந்த சந்தை 2013 ஆம் ஆண்டிற்காக வாடகைக்குப் பெற்ற வாடகையாளர்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 51,240 தொகையான நிலுவை மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது. கேள்வி பிணை வைப்புப் பணத்தில் ரூபா 33,600 தொகை தீர்க்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய ரூபா 17,640 தொகை அறிக்கைத் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிற்காகவும் வெலிகேபொல வாராந்த சந்தை மேற்கூறப்பட்ட வாடகையாளர்களுக்கே வாடகைக்கு வழங்கப்பட்டு நடாத்தப்படுவதுடன் 2014 ஆம் ஆண்டிற்காக கேள்வி பிணை வைப்புப் பணத்தையும் அறவிடுவதற்கு பரிசோதனைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய நீர்த்திட்டத்திற்குத் தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரதேச சபை நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 205,175 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக விலைக் குழுவின் சிபாரிசினை பெறுவதற்கு அனுப்பப்படாமையினால் பதிவு செய்த வழங்குனரின் மூலம் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் தொடர்பான மாதிரிகள் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீடோ அல்லது சிபாரிசோ இன்றி 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 943,250 பெறுமதியான 350 நீர்மானி மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இருப்புப் பதிவேட்டின் படி 30 நீர்மானிகள் களஞ்சியத்தில் காணப்பட வேண்டிய போதிலும் நீர்மானி எதுவும் களஞ்சியத்தில் இல்லாதிருந்தமை 2014 சனவரி 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது அலுவலகத்தின் கணணி மற்றும் உள்ளகத் தொலைபேசிகளை வலைப்பின்னல் படுத்துவதற்காக ரூபா 154,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய பிரகாரமும் சபையின் தேவையினை இனங்காணாமலும், மாதிரிகளைத் தயாரித்து கேள்வி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படாமலும் கேள்வி கோரப்பட்டிருந்தது. வலைப்பின்னல் முறைமை உரிய தரத்தில் உள்ளமை தொடர்பாக தொலைத்தொடர்பு முறைமை தொடர்பான பொறியியளாரின் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு நடைமுறைகளின் நலிவுகளின் காரணமாக தாபிக்கப்பட்ட வலைப்பின்னல் அடிக்கடி தடைப்படுவதுடன் அந்த வலைப்பின்னல் சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் வசதியின்மை காணப்பட்டது.

(ஈ) எல்எப் - 4847 ஆம் இலக்க கெப் வாகனம் 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையின் உதவி முகாமையாளரிடமிருந்து (பொறியியலாளர்) வாகனத்தின் நிலைமை தொடர்பான அறிக்கையொன்று பெறப்பட்டிருந்த போதிலும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான இரண்டு கெப் வாகனங்கள் இருக்கும் போது வாடகை வாகனங்களுக்காக போக்குவரத்துக் கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 137,837 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வடக்கு ஹுனுவல மற்றும் பெலென்தகந்த நீர் உத்தேசத் திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் பணத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களுக்காக முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் உரியதாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,988,156 கூட்டுத்தொகையான தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டு வரையில் ஓட முடியாத நிலையில் காணப்பட்டமையின் காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் கெப் வண்டி என்பன கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் சபை வளவில் செயற்பாடின்றி தரித்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.2.2 ஒப்பந்த நிருவாகம்

மகநெகும செயற்திட்டம் தொடர்பாக 2014 பெப்ரவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | மகநெகும செயற்திட்டம் | அவதானிப்பு |
|---|---|---|
| (i) | கைக்காரகொடை வீதிக்கு கொங்ரீட் சிறுகற்கள் பதித்தல் | வீதியில் உடைந்து விழுந்த மண் குவியலின் காரணமாக வீதியின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. |
| (ii) | உடவெல் கொடை வீதிக்கு கொங்ரீட் சிறுகற்கள் பதித்தல் | பூர்த்தி செய்யப்பட்ட வீதியின் பகுதியொன்றில் சிறுகற்கள் கீழே இறங்கியிருந்தது. |
| (iii) | மாதொல அம்பகஹவத்தை வீதிக்கு கொங்ரீட் சிறுகற்கள் பதித்தல் | கொங்ரீட் சிறுகற்கள் தொடர்பான நிலைமைப் பரிசோதனை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மாதொல அம்பகஹவத்தை வீதிக்கு கொங்ரீட் சிறுகற்கள் பதித்தல் | வீதியின் ஆரம்பத்தில் ஆகக் குறைந்த அகலம் 8 அடி காணப்படவில்லை. |

மகநெடும செயற்திட்டத்தின் கீழ் மல்மீகந்த சுதுஹீன்கந்த வீதியை (1 கட்டம்) அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பொல்வத்தஹேன விவசாய அமைப்புடன் 2013 செப்தெம்பர் 02 ஆந் திகதி உடன்படிக்கை காலம் 02 மாதங்கள் 28 நாட்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கைளிக்கப்பட்டமைக்கு வேலைப்பூர்த்தி அறிக்கை மற்றும் அளவிடை அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிறைவேற்றப்படாத 1.9 மீற்றருக்காகவும் உரிய பகுதி நிறைவேற்றப்படாத பட்டியல் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை 2014 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக 38 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 4,899,049 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்